# சங்க இலக்கியம் கூறும் பண்பாட்டு விழுமியங்கள்

30

முனைவர் த. நாகம்மாள்,
உதவிப்பேராசிரியர்,b தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர்-43
Email.Id: 19764naga@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழக வரலாற்றில் சங்க காலத்திற்கென்று தனிச் சிறப்புண்டு. சங்க காலம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. சங்க காலத் தமிழருக்கும் வேந்தர்களுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் மேற்கொண்டிருந்த பண்பாடு சிறப்பாகக் கருதப்படுகிறது. பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கையை நாகரிகத்தைஇ பண்பாட்டை, ஒழுகலாறுகளை அறிவதற்கு உதவுவன பண்டைய இலக்கியங்கள். மக்களின் அக வாழ்க்கை, புற வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளவும் பயன்படுகிறது. பண்பாடு என்பது 'பண்படுதல்'; எனப்படுகிறது. கற்காலம் முதல் தற்காலம் வரையில் பல்வேறு இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்கள் மனிதர்களின் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று நிகழ்வுகள். வாழ்க்கைமுறை போன்றவற்றை எடுத்துக்காட்டும் கலனாக அமைந்துள்ளன. மனிதர்களின் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், இல்லறம், விருந்தோம்பல். சங்க கால மக்களின் வாழ்க்கைமுறைகள், தனிமனிதன் பண்பு இவைகளை அறியும் விதமாகக் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

அறம், பண்பாடு, விருந்தோம்பல், இல்லறம், ஒழுக்கம், எண்ணம், விழுமியம், அகப்பண்பாடு, மெய்யுணர்வு, தலைவன், தலைவி.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் அனைத்தும் மனித மனத்திற்கு அடிப்படையான அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் எனும் நான்கு உறுதிப் பொருள்களை எடுத்தியம்பும் கருவூலமாகத் திகழ்கின்றன. தமிழக வரலாற்றில் சங்க காலத்திற்கென்று தனிச் சிறப்புண்டு. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் மேற்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றது. தமிழருக்கும் வேந்தர்களுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் மேற்கொண்டிருந்த பண்பாடு சிறப்பாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியம் பண்டையத் தமிழரின் பண்பட்ட வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகும். ஒருவனுடைய பண்பு எங்கே வெளிப்படுமென்றால் அவனுடைய செயல்கள் மூலம் தான் வெளிப்படும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விலங்குகளோடு விலங்காக விளங்கிய மனிதன் அறிவு. அனுபவம் ஆகியவற்றிடனே பல்வேறு இலக்கியங்களை இயற்ற ஆரம்பித்தான்.

மனிதனின் எண்ணம், கருத்து ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு கருவூலமாகத் திகழ்வது

சங்க இலக்கியங்களே. சிறந்த பண்பாட்டை நமது இலக்கியம் பறைசாற்றுகிறது. பண்டைய இலக்கியமான சங்க இலக்கியத்தில் காதல், வீரம், மனித நேயம், விருந்தோம்பல், ஈகை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும் நிலைகளிலும் தமிழனின் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. தமிழ் இலக்கியங்கள் மனிதர்களின் நாகரிகம்இ பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று நிகழ்வுகள். வாழ்க்கைமுறை போன்றவற்றை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. பண்பாடு என்பது மிகவும் பழமையானது. உலகனைத்தும் போற்றித் தமிழரைப் புகழ்வதற்குச் சங்க நூல்கள் அழியா விழுமிய கருவூலங்களாகத் திகழ்கின்றன. சங்க புலவர்களால் செய்யப்பட்ட செம்பொன் சித்திரம் சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியம் எனும் ஆழ்கடலில் மூழ்கி மக்களின் பண்பாட்டு விழுமியம் எனும் முத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பண்பாடு - விளக்கம்**

“**பண்பாடு**” என்ற சொல் ‘பண்படு’ என்ற கூட்டு வினைச்சொல்லிலிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். இதனை ஆங்கிலத்தில் “ culture”என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். ஆதிகாலத்தில் குகைகளில் தனித்து வாழ்ந்த மனிதனை சமுதாயத்தோடும் இணைந்து வைத்ததே பண்பாடுதான். பண்பாடு என்ற சொல் பண்பாடுதல் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. ‘பண்’ என்பது பாடல் அல்லது இசை என்னும் பொருள்படும். ‘பாடு’ என்பது “படு” என்பதன் நீட்டல் விகாரம் படு என்பது செம்மைபடுத்துவது என்னும் பொருள்படும். மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதும் பண்பாடுதான். உலகில் தோன்றிய ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான பண்பாடு உள்ளது. மனிதன் தமிழ் பண்பாடு என்ற சொல்லை 1937-ஆம் ஆண்டு டி.கே. சிதம்பரம் முதலி;யார் அவர்கள் அறிமுகப்படுத்தினார். தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கு உரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்”

(கலித்தொகை)

என்று கலித்தொகை பாடல் வழி சுட்டிக்காட்டுகின்றது. பண்பாடு என்பது “அகப்பண்பாடு, புறப்பண்பாடு” என்று இருவகைப்படும். உணவு, உடை, உறையுள் போன்றவை புறப்பண்பாடு. இது ஒரு வகையில் இன்றைய நாகரிகத்தில் அடங்கும். செ.வைத்தியலிங்கம் அவர்கள் அன்பு, நான், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை, மெய்யுணர்வு தெய்வநம்பிக்கை, அருள், புலனடக்கம், நன்றி, சீலம் போன்ற அடிப்படையில் உணர்வது அகப்பண்பாடு என்று கூறுகிறார். முறையற்று காணப்படும் நிலத்தைக் கண்டு அதை சமன்படுத்துவது மேலும் அதனை சீரமைப்பது பண்படுத்துதல் என்கிறோம். நெறி பிறழ்ந்து நடக்கும் மனிதனை தீயசெயல், எண்ணம் ஆகியவற்றை மாற்றி நடைமுறை வாழ்வியலுக்கு மனதைப் பண்படுத்துதல் பண்பாடு என்கிறோம். இதனை,

“பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்” (கலி-133)

“பணனும் பண்பும் பாடறிந்து ஒழுகல்”

(நற்றி-160)

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

திருவள்ளுவரும் பண்பு பற்றி கூறுகையில்,

அறம்போலும் கூர்மையே ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்.

(திருக்குறள்-997)

என்று தனது குறள் வழியில் குறிப்பிடுகிறார் வள்ளுவன். பண்டைய தமிழ் மக்களின் பண்பினை அறிவதற்கு தமிழ் இலக்கியங்களே சான்றாக அமைகின்றன. உலகம் நல்வழியில் இயங்குவதற்கு பண்பாடு அல்லது பண்புடையார் வாழ்வது மிகவும் பயனுள்ளது,

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் இதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்”

(திருக்குறள்-996)

என்பது வள்ளுவன் வாய்மொழி. அன்பும், அறனும் எங்கெங்கும் பரவிப் பெருகி வாழும் வாழ்க்கைப் பண்பும் பயனுமாக மிளிர்வது பண்பாட்டின் நோக்கமாகும். சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் ஒன்றான கலித்தொகை ‘பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்’ என பண்பாட்டிற்கு இலக்கணங் கூறுகின்றது. திருக்குறளில் பண்புடைமை என்ற அதிகாரத்திற்கு விளக்கம் கூறும் பரிமேலழகர் ‘பண்புடைமையாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்’ என எடுத்துரைக்கின்றார். வள்ளுவன். “பண்பாடு” என்ற சொல் ‘பண்படு’ என்ற கூட்டு வினைச்சொல்லிலிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். ஆதி காலத்தில் குகைகளில் தனித்து வாழ்ந்த மனிதனை சமுதாயத்தோடும் இணைத்து வைத்ததே பண்பாடுதான். “பண்பாடு” என்பதற்கு பண்டைய இலக்கியங்கள் விளக்கங்கள் கூற முயன்ற ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன. பண்டைக்காலத்து மக்களின் வாழ்க்கை முறையை அறிவதற்கும் ஆராய்வத்கும் மிக்க இன்பந் தருவது சங்க காலத்தில் நம் முன்னோர்கள் எப்படி எப்படி வாழ்ந்தார்கள், என்ன என்ன நம்மைகள் அவர்களிடம் சிறந்திருந்தன. இக்காலத்தில் வாழ்கின்ற நாம், அவர்கள் வாழ்க்கை முறைகளிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய திருத்தங்கள் என்னென்னவோ, என்று அறிந்து கொள்வதற்கு நமது மனம் எவ்வளவோ வேட்கை கொள்கின்றது.

**இல்லறம்**

அன்பின் அடிப்படையான வாழ்க்கை இன்பங்களைச் சங்ககாலத் தமிழர் அனுபவித்தனர். உலக வாழ்வு என்பது இல்லறத்தை நிலைக்களனாய் கொண்டு இயங்குவதாகும். குறுந்தொகையில் பாடலில்,

“மனைஉறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்
இனியவும் உளவோ”

(குறுந்தொகை-322.பா.வரி-5-6)

என்று இல்லறத்தின் சிறப்பு பற்றிக் கூறப்படுகின்றன.

வறுமையிலும் செம்மை உடையவளாக தலைவி இல்லறம் நடத்துகிறாள் என்பதனை,

"குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி"

(சிறுபாணாற்றுப்படை-பா.வரி:138-139)

எனும் பாடல் மூலம் தலைவியின் இல்லற மாண்பு வெளிப்படுத்துகின்றன.

சங்கத் தமிழர்கள் தம் இல்லறத்தை நல்லறமாகக் கருதினர். ஒத்த வயதுடைய தலைவனும், தலைவியும் மனத்தால் ஒன்றி வாழ்தலையே பெருமையாகக் கருதினர் என்பதை,

"ஒன்றன் கூறாடைஉடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"

(கலி – 18)

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது.

குறுந்தொகைப் பாடல் மூலம் தலைவன், தலைவியின் இல்லற இன்பத்தினை,

"நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுக தில்லகடன் அறிந்து
இருவோம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே"

(குறுந்தொகைஇபா.வரி-2-6)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. மேலும்,

ஔவையார் அவர்கள் கணவன், மனைவி இல்லற வாழ்க்கை ஒருமித்தே இணைந்திருக்க வேண்டும் என்பதனை,

"காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவுபட்டதே இல்வாழ்க்கை"

என்ற பாடல் வரிகளின் மூலம் விளக்குகின்றார்.

நான்மணிக்கடிகையில்' இல்லறம் பற்றி பாடல் வழி குறிப்பிடுகையில்,

"மனைக்கு விளக்கம் மடவாள்"
புறநானூற்றுப் பாடலில்
"மனைக்கு விளக்காகிய வான்நுதல்"

(நான்-105)

என்று இல்லறமாய் அமைவதற்குக் காரணமாய் அமைபவள் பெண்தான் என்பது உணர்த்தப்படுகின்றன.

**ஈகை பண்பாடு**

பிறருக்கு கொடுத்து உதவும் பண்பே ஈகை ஆகும். ஒருவன் மிகுதியான செல்வம்

உடையவனாக இருந்தால் அச்செல்வம் பிறருக்கு பயன்படும்படி வாழ்தல் தான் சிறந்த வாழ்க்கை. தன்னை நாடி பொருள்கேட்டு வந்தவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல் பண்டைய தமிழர் மரபு. பிறருக்கு உதவும்போது தான் அங்கே செல்வத்தின் பயனை அடைய முடியும். நம்மை சார்ந்த அனைவரும் வறுமை இல்லாத வாழ்க்கை வாழ செல்வம் வைத்திருப்பவர்கள் கொடை செய்தல் வேண்டும். அதன்படி தமிழன் வாழ்ந்தான் என்பதை பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

“உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்குமே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே”

(புறநானூறு -189)

என்ற நக்கீரனார் பாடலில் ஈகையின் சிறப்பு கூறப்படுகிறது.

தனிமனிதப் பண்பாடு

பண்பாடு என்பது பண்பட்ட எண்ணமும் சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து திருந்திய நிலையாகும். எல்லோருடைய இயல்புகளும் அறிந்து ஒத்த நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆகின்றார். சங்க காலத்தில் தனிமனித வாழ்க்கையில் நட்பும்இ பகையும், விருப்பும், வெறுப்பும், அன்பும், அன்பின்மையும் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் இடம்பெற்றன. ஆனால் சங்கப் புலவர்கள் சமுதாயப் பொதுமைக்காகவும், பண்பாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் பிறர் பழிதூற்றாமல் தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளார். இதனை,

“நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் ---

என்று குறிப்பிட அறியலாம். நல்வினை செய்யவில்லையென்றால் தீவினையைச் செய்யாதீர்கள் என்று தனிமனித பண்பாட்டை சங்க நூல் குறிப்பிடுவதனை அறியமுடிகிறது.

விருந்தோம்பல் பண்பு

சங்ககால தமிழர் மரபில் பண்பாட்டுக் கூறுகளில் முதன்மையான பண்பாக விளங்கியது விருந்து உபசரித்தல் ஆகும். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்க்கைக்கு வேண்டிய விருந்தோம்பல் பண்பில் ஈடுபட்டால் வீடுபேறு அடைவார்கள் என்ற நம்பிக்கைகளில் சங்ககால மக்கள் விருந்தோம்பல் பண்பினை மேற்கொண்டிருந்தனர்.

“வருநர் வரையார், வாரவேண்டி
விருந்துகண் மாறாது உணீஇய”

எனும் பதிற்றுப்பத்துப் பாடலில், வருகின்றவர்களைக் தடுக்காமல் அன்புடன் உண்டு செல்லும்படி வேண்டிக் கொள்கின்றனர். பண்டைய தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது. அறவாழ்க்கையின் முழுமை அன்பு என்ற பண்பால் மேன்மையடைந்தது. அன்பு ஒன்றே அனைத்திற்க்கும் ஆதாரமாக அமைந்தது. அறம்இ பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் நூற்பயன்

என்பர். இந்நான்கினுள் அறம் வலிமையுடையதாகக் கருதப்படுகின்றது. இவ்வறத்தினை மேற்கொள்ள பொருள் வேண்டப்படுகின்றது. இப்பொருளைத் தேடுவதற்குத் தலைவன் விருந்து என்னும் அறம் புரிந்த பண்பும் சங்கப் பாடல்களில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். சங்க கால மக்கள் பசித்து வரும் புதியவர்களுக்காகச் சிறந்த உணவை நாள்தோறும் அளித்தனர்.

“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கம்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”

என்று தொல்காப்பியர் சங்ககாலத் தலைவியின் மாண்புகளில் விருந்து புறந்தருதலைத் ஒரு செயலாகக் குறிப்பிடுவதைக் காணலாம். விருந்து செய்தல் வேண்டி சிறந்த பொருளை ஈட்டி வருதல் தலைவனுக்குரிய கடமையாக அமைந்தது. இதனை,

“செழுநகர் நல்விருந்து அயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல
கல்பிறங் காரிடை விளங்கிய
சொல்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே”

என்று அகநானூறு பாடல் வழி சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்க்கைகாக மட்டுமல்லாது விருந்தினருக்கு உணவு கொடுப்பதற்காகப் பொருளீட்டச் செல்லுதல் அக்கால மக்களின் தலைச் சிறந்த பண்பாட்டுப் பதிவாக அமைகின்றது. இதனை,
வள்ளுவர்.

“செல்விருந் தோம்பி வருவிருந்து பார்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு”

விருந்தோம்பல் சிறப்பினை குறள் வழி தெளிவுப்படுத்துகிறார்.
நற்றிணைப் பாடலில்,

“எமக்கே வருக! துpல் விருந்தே: சிவப்பு ஆன்று,
சிறிய முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கம்மே”

என்று இப்பாடல் விருந்தினரைக் கண்டால் முகமலர்ந்து வரவேற்கும் சிறந்த பண்பு தமிழர்களிடம் காணப்பட்டது.
திருவள்ளுவர் விருந்தோம்பல் பற்றி.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு”

என்று வள்ளுவன் குறிப்பிடுகின்றார்.
சங்க இலக்கியங்களில் மன்னர்கள் புலவர்களுக்கும், இல்லற வாழ்க்கை மேற்கொண்டோர்கள் – உறவினர்கள், இறையடியவர்கள், யாசியப்பவர்களுக்கும் விருந்தோம்பல் பண்பில் ஈடுபட்டிருந்தனர்

என்பதனை சங்க இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிகின்றோம்.

முடிவுரை

தமிழர்கள் எண்ணம் போல் வாழாது தமக்கென்ற ஓர் எல்லைய வகுத்து வாழ்ந்தனர். மனிதகுல வாழ்க்கைக்கு கல்வி என்பது மிக முக்கியமானதாகும். சங்க இலக்கய நூல்கள் அனைத்தும் மக்களின் வாழ்வாதார அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கிச் சிறந்த பண்பாட்டு கருத்துக்களை எடுத்தியம்புகின்றன. பண்டைய மகளிர் தம் இல்லம் தேடி வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று நேரம் கருதாது அவர்களுக்கு உணவு படைத்தனர். தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கால கண்ணாடியாகத் திகழ்ந்திருக்கிறது. உலகத்தில் மற்ற நாடுகளில் நாகரிகமும் பண்பாடும் தோன்றுவதற்கு முன்னரே மனிதன் தன் பண்பை உணர்ந்து வாழ்வதற்கு முன்னரே இங்கு உயரிய பண்பாட்டை இலக்கியங்கள் வாழ்வோடு எடுத்துக்காட்டுகிறது. சங்க கால மக்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்வின் மூலம் மிக உயர்ந்த பண்பாட்டினை இவ்வுலகுக்கு அளித்துள்ளனர் என்பதனை அகச்சான்றுகள் கொண்டு அறிய முடிகின்றது. சங்கத்தமிழர் விருந்தோம்பலை அறமாகப் போற்றியுள்ளனர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல், அவ் இல்லறம் நடத்துவதே வறியவர்களுக்கு ஈதல் எனும் கோட்பாட்டைக்கொண்டு தன்னால் இயன்ற மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து சங்க மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பதை இதன் வாயிலாக அறிய முடிகிறது. அக-புற வாழ்வின் வழி தமிழர் பண்பாட்டை உணர்த்தியுள்ளனர். உயரிய பண்பாக தமிழரின் பண்பு சிறப்பு பெறுவதாக அமைகின்றது.

துணைநூற்பட்டியல்:

1. பரிமேலழகர்.உ.ஆ –திருக்குறள், சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம்இ சென்னை – 1975.
2. புலியூர்க்கேசிகன், குறுந்தொகைஇ பாரிநிலையம்இ 90இபிராட்வே சென்னை-600 108இ பதிப்பு -2008.
3. இராமநாதன் செட்டியார் -சங்ககாலத் தமிழர் வாழ்வு

அடிக்குறிப்புகள்:

1. திருக்குறள்-997
2. குறுந்தொகை-322.பா.வரி-5-6
3. சிறுபாணாற்றுப்படை-பா.வரி:138-139
4. புறநானூறு -189
5. நான்மணிக்கடிகை-105
6. சிறுபாணாற்றுப்படை-பா.வரி:138-139